**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No. 50/2021** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 7** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | குமார் |
| Father / Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | 21, ஆட்டுக் காரத் தெரு, மானம்புசாவடி, |
| Taluk | : | தஞ்சாவூர் |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | பட்டுப்புடவை வியாபாரம் |
| Age | : | 42./2021 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.11.2021**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3,**
**திரு எம். செழியன்,** தட்டச்சர்

**C.C No.50 /2021 D**ate: 29.11.2021

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பட்டுப் புடவை வியாபாரம் செய்து வருகின்றேன். அ.சா.1 சுபாஷினி என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டடுள்ளது. கடந்த 24.01.2021 அன்று நான் வீட்டில் இருந்தபோது இரவு 9.00 மணியளவில் வீட்டின் வெளியே சத்தம் கேட்டது. நான் வெளியே சென்று பார்த்தபோது செயினை அறுத்துச் சென்றதாக கூறினார்கள். மறுநாள் காலை 7.00 மணியளவில் ஜெயபால் என்பவரின் கடை முன்பாக நானும், என் நண்பர் சரவணனும் நின்று பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது கிழக்கு காவல் நிலைய போலீசார் விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள். என்னிடம் சாட்சி

கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் சரவணன் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

சம்பவ இடத்தில் 3, 4 போலீசார் இருந்தார்கள். நானும் புகார்தாரர் சுகாசினியும் ஒரே இனம். நான் சத்தம் கேட்டுத்தான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். புகார் கொடுத்த சுபாஷினியுடன் நான் புகார் கொடுக்க செல்லவில்லை. நீங்கள் பார்வை மகசரில் போட்டுள்ள கையொப்பம் உங்களுடையது அல்ல என்றும், புகார்தாரர் சுபாஷினி உங்கள் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)